<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>O.S.No.13/2018</u>**

பெயர் : சௌந்தர்ராஜன் ( PW1)

த/பெ. : சிங்கரம்பிள்ளை.

தேதி : 25.07.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**<u>1 முதல் 8ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**:-

தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் மயிலாடுதுறை மாவட்டம் திருவாளப்புத்தூர் வட்டத்தில் அமைந்துள்ள தண்ணீர்பந்தல் அறக்கட்டளைக்கு சொந்தமானது. மயிலாடுதுறை தாலுக்கா புத்தகரத்தில் உள்ள முருகேசன் பிள்ளை என்பவர் அந்த அறக்கட்டளையை உறுவாக்கினார்,. அந்த அறக்கட்டளையின் பத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதுபோல எந்தவொரு பத்திரமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் என்னை கேட்கவில்லை அதனால் நான் தாக்கல் செய்யவில்லை. அந்த பத்திரத்தில் யார் உறுப்பினர்கள் என்றும் உறுப்பினர்கள் இறந்துவிட்டார் யார் இந்த அறக்கட்டளைக்கு உறுப்பினராக முடியும் என்பன விபரங்கள் தெரியவரும் என்றால் சரிதான். அந்த பத்திரம் தாக்கல் செய்யாமல் எனக்கு வழக்கு தாக்கல் செய்ய எந்த உரிமையும்இல்லை என்று சொன்னால் சரிதான்.

2020ஆம் வருடம் வழக்கு தாக்கல் செய்த பிறகு அறக்கட்டளையின் உறுப்பினரான முத்தையன் என்பவர் காலமாகிவிட்டார். அவருக்கு வாரிசுகள் இருந்து வருகிறார்கள். முத்தையனுக்கு இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் உள்ளார்கள். மேற்படி இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் ஆரம்பத்தில் வழக்கு தாக்கல் செய்ததால் அதனை பொறுத்து நான் நடத்தி வருகிறேன். பிராது தாக்கல் செய்யும் காலத்தில் நானும் முத்தையன் என்பவரும் கையெழுத்து செய்துள்ளோம். தாவா வழக்கில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளோம் என்றால் மயிலாடுதுறை தாலுக்கா புத்தகரம் கிராமத்தில் புல எண் 290/1ல் 10 சென்ட் அறக்கட்டளைக்கு வசம் வேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

மேற்படி அறக்கட்டளையானது பதிவுசெய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவுசெய்யப்படவில்லை. மேற்படி அறக்கட்டளைக்கு தாவா சொத்து தவிர வேறு சொத்து உள்ளதா என்றால் திருவாளபுத்தூர் வட்டம் புல எண் 290/1ல் நஞ்சை 1 ஏக்கர் 32 சென்ட் உள்ளது. அது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் எங்களது சொந்த அனுபவத்தில் உள்ளது. எங்களது சொந்த அனுபவம் என்பது தண்ணீர்பந்தல் டிரஸ்ட்டியின் அனுபவமாகும். தற்போது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் எங்களுடைய அனுபவத்தில் தான் உள்ளது. எங்களுடைய அனுபவம் என்பது காலமாகிவிட்ட முத்தையன் குடும்பத்தார், மற்றும் சௌந்தர்ராஜன் ஆகிய எங்களது குடும்ப அனுபவத்தில் உள்ளதை குறிக்கும். அறக்கட்டளையை பொறுத்து கணக்கு வழக்குகள் உண்டு. அதில் இருந்து வரும் வருமானத்தை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்றால் புத்தகரம் கிராமத்தில் தண்ணீர்பந்தல் வைத்து பொது

மக்களுக்கு தண்ணீர் வழங்குவதுதான் அவர்களது நோக்கமாகும். அந்த தண்ணீர் வழங்குவது என்பது சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் தண்ணீர் வழங்கவேண்டும். குறிப்பாக தண்ணீர் வழங்கும் இடம் என்பது முத்தையன் என்பவரின் வீட்டு வாசலில் கொட்டகை போட்டு தெருவில் வைத்து வழங்கி வருகிறோம்.

அந்த தண்ணீர் பந்தலை ஜாதி வேறுபாடு இல்லாமல் பொதுமக்கள் அனைவருக்கும் தண்ணீர் வழங்கி வருகிறோம். அவ்வப்போது எங்களது கமிட்டியை கூட்டி அவர்களின் ஆலோசனையின் பேரில் கோவில்களுக்கு அன்னதானம்,. வேறு தர்மகாரியங்களை செய்வோம். கடைசியாக எப்போது அவ்வாறு தண்ணீர்பந்தல் வைத்து நடத்தினோம் என்றால் சென்ற சித்திரை மாதம் தண்ணீர், நீர்மோர், பானகம் சுண்டல் ஆகியவற்றை சித்திரைமாதம் ஆரம்பிக்கும்போது செய்தோம். அதுவும் பொதுமக்கள் அனைவருக்கும் செய்வோம். மேற்படி டிரஸ்ட் பொறுத்து தனியார் அறக்கட்டளைக்கு சொந்தமானது அல்ல,. பொதுவான அறக்கட்டளையாகும். சென்ற சித்திரை மாதம் செய்துவந்த தண்ணீர், நீர்மோர் ஆகியவை செய்ததற்கான கணக்கு வழக்குகள் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலரான முத்தையன் மனைவி மக்களிடம் உள்ளது. முத்தையன் மனைவி தற்போது உயிருடன் இருக்கிறார். தாவாவில் முத்தையன் மனைவியையோ, முத்தையனின் இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள்களை தரப்பினராக சேர்க்கவில்லை. முத்தையன் இறந்துபோனதும் இதேபோல் ஒவ்வொரு அறங்காவலரும் இறக்கும்போது வழக்கின் தரப்பினரை மாற்றவேண்டிய சூழல் இருப்பதால் அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை.

தாவா சொத்தானது அறக்கட்டளையின் நேரடி நிர்வாகத்தில் தான் இருந்து வந்தது. இன்றைய தேதி வரை தாவா சொத்தானது அறக்கட்டளையின் நேரடி நிர்வாகத்தில் தான் இருந்து வருகிறது. நேரடி நிர்வாகம் என்பது நாங்கள் தான் சாகுபடி செய்யும் என்கிற பொருளாகும். ஆனால் முதல் பிரதிவாதியான பன்னீர் செல்வத்தின் பேரில் சொத்து வசப்பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

1 முதல் 8ஆம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.